திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிளாஸ்டிக் குழாய் தயாரிக்கின்ற தொழிற்சாலை தஞ்சை மாவட்டத்திலே அமைக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டிருக்கிறார். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தஞ்சையை, industrially most backward என்று அறிவித்திருக்கின்றார்கள். அதைப் பயன்படுத்தியாவது, தஞ்சையிலே பிளாஸ்டிக் குழாய் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைப்பதற்கு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பின் தங்கிய பகுதிகள் என்று அரசு அறிவித்துள்ள இடங்களை ஆங்காங்கு உள்ள தொழில் முனைவோர்கள்தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமேயல்லாமல், அரசே அதைப் பயன்படுத்திக் கொள்வதென்பது இயலாத காரியம்.

கைதிகள் செய்யும் வேலைகளுக்கு ஊதியம் வழங்குதல்.

*7042—பேராசிரியர் க. பொன்னுசாமி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மத்திய சிறைகளில் கைதிகள் செய்யும் வேலைகளுக்கு அரசு வழங்கும் ஊதியத்தை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) ஆம். ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டது.

(ஆ) அரசாணை எண் 1287, உள் (சிறை 3) துறை, நாள், 11—7—1989-ல் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு ரூ. 1.00 என்றிருந்தது ரூ. 2.00 ஆகவும், அரைத் தேர்ச்சியடைந்தவர்கள் ரூ. 0.50 என்றிருந்தது ரூ. 1.00 ஆகவும், தேர்ச்சி அற்றவர்கள் ரூ. 0.25 என்றிருந்ததை ரூ. 0.50 ஆக மாற்றியமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

1990 ஏப்ரல் 24]

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட காரணங்களுக்காக, அதாவது ஒரு 'sudden provocation' காரணமாகக் குற்றம் புரிந்து, தண்டனை அடைந்து ஆயுள் கைதியாகப் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வழக்கமாகக் குற்றம் புரிபவர்கள் அல்லர். சிறைச்சாலையிலுள்ள அதிகாரிகள், அவர்கள் இனி மேல் குற்றம் புரிய மாட்டார்கள் என்று அவர்களுக்குப் பரிந்துரை செய்யக்கூடிய பட்சத்தில் ஓராண்டுக் காலம் அவர்களைப் பார்த்து, அவர்களை வெளியே அனுப்பினால் ஆபத்தில்லை என்ற சூழ்நிலையில் பகலிலே தனியார் தொழிற்சாலையிலோ அல்லது அரசுத் தொழிற்சாலையிலோ அவர்கள் தொடர்ந்து தொழில் புரிய, இரவு நேரங்களில் தண்டனைக் காலம் முடியும் வரையிலும் அவர்களைச் சிறைச்சாலையிலே வைத்தால், கைதிகளுக்குப் புனர்வாழ்வு அளித்தது போலவும் இருக்கும். அவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடிக் கொடுத்தும், விடுதலை ஆகி வந்த பிறகும் தொடர்ந்து அவர்கள் பணியிலே இருக்கக் கூடிய வகையிலே செய்ய முடியும் என்ற காரணத்தால் இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய நீண்ட கேள்வியை எழுதி அனுப்பினால், அதற்கு ஒரு விளக்கமான பதில் அளிக்கலாம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாள் சிறைத் தண்டனை அடைந்து சிறைகளிலே இருக்கக் கூடிய கைதிகளைக் கொண்டு அரசுத் துறை அணைக்கட்டுகள் மற்றும் பாலங்கள் போன்ற வெளியிலே நடக்கக் கூடிய வேலைகளுக்கு, அந்தக் கைதிகளைக் கொண்டு வந்து வேலை வாங்கும் பழக்கம் முன்பு இருந்ததாகத் தெரிகிறது. அதை மீண்டும் கொண்டு வந்து, அந்தக் கைதிகளை வெளியிலே வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அப்படி முன்பு இருந்ததாக எனக்குத் தெரியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இதை ஒப்புக் கொள்கிறாரா என்பதும் ஒரு கேள்வி. அப்படி சிறைக் கைதிகளைக் கொண்டு போவதானால், பாதுகாப்பு எல்லாம் தேவையாக இருக்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறையிலுள்ள கைதிகள் ஆடை நெய்வது, தச்சு வேலை செய்வது, காலணி செய்வது போன்ற வருவாய் பெறக் கூடிய வேலைகளைச் செய்கிறார்களே, அவர்களுக்கு இப்போது நிச்சயித்துள்ள கூலியை உயர்த்திக் கொடுக்க அரசு ஏதாவது முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியைப் போலவே இருக்கிறது. விடை தேவை இல்லை. (குறுக்கீடு) ஒரு சிறிய அறிவிப்பு. வினாக் கேட்கிறவர்கள் மூலக் கேள்வியையும் படித்துப் பார்க்க வேண்டும். காதால் கேட்டுக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகும் மூலக் கேள்வியையே திரும்பவும் மூன்றாவது தடவையாகக் கேட்டால் என்ன பொருள்? (குறுக்கீடு) அது மூளைக் கேள்வியாக இருக்க வேண்டும். (சிரிப்பு)

சார்நிலை நீதிபதி பணியிடங்கள்.

* 8342—திரு. ஆ. அறிவழகன் :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது நமது மாநிலத்தில் 60 சார்நிலை நீதிபதிகளின் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தகுதியான நபர்களைத் தேர்வாணையத்தின் மூலமாக தேர்வு செய்து நிரந்தரமாக நியமனம் செய்ய அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. ஆ. அறிவழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நீதிபதி ஓய்வு பெறுகின்றார் என்பது எப்போதோ மாநில சட்டத் துறைக்கும், நீதித் துறைக்கும் நன்கு தெரியும். அப்படியிருக்கும்போது, அவர் ஓய்வு பெறும் வரை காத்திருந்து, பின்னர் 6, 7 மாதங்கள் அப்பணியிடத்தைக் காலியாக வைத்திருந்து, பிறகு சட்ட மன்றத்தில் இதுபோன்ற வினாக்களை எழுப்பிய பிறகு இடங்களை நிரப்ப வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. முன்கூட்டி.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோன்ற வாக்கியம் எல்லாம் சொல்லக் கூடாது. சட்ட மன்றத்திலே எழுப்பினால் தான் நிரப்புவார்கள் என்பது குற்றச்சாட்டு மாதிரி ஆகிவிடும். வினா மட்டும் கேளுங்கள்.